2. தகவல் கோரல்

(இ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா கிராமங்களுக்கு நெய்யாறு இடதுகரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் தருதல்

திரு. என். நன்மாறன்: கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் ஒன்பது வருவாய் கிராமங்களில் உள்ள விவசாயிகளுடைய நலன் கருதி, நெய்யாறு இடதுகரைக் கால்வாயிலிருந்து தண்ணீர் பெற்றுத் தர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அவ்வளவுதான், உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன். (குறுக்கீடுகள்) அடுத்த matter–க்குப் போயாகிவிட்டது. உட்காருங்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று இருபத்து எட்டாவது முதல் இருநூற்று முப்பது ஐந்தாவது வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் தலைவரின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. கோவை தங்கம், மனுக்கள் குழுத் தலைவர்.

[2011 ஜனவரி 13

முற்பகல் 10—00

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஐயா அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து, அனைவரும் வால்பாறைக்கு வர வேண்டுமென்று கேட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவையின் 2009-2011 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்று இரண்டாவது முதல் நூற்று ஏழாவது வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2011-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2011-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

(குறுக்கீடு) சொல்லுங்கள்.